செ.வெ.எண்: 414 நாள்: 05/07/2011

படிவம் எண்.1

## தேர்தல் அறிவிப்பு

(தேர்தல் நடத்துவதற்குரிய விதிகள் 1961–இன் விதி 3–ஐ காண்க)

## மாநிலங்களவைக்கு நடைபெறும் தேர்தல்

(திரு. கே.வி. இராமலிங்கம், மக்களவை உறுப்பினர் அவர்கள் இராஜினாமா செய்ததையடுத்து ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்காக)

இதனால் அறிவிக்கப்படுவது யாதெனில் :–

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் (தேர்ந்தெடுக்கப்பட்ட) உறுப்பினர்களை வாக்காளர்களாகக் கொண்டு மாநிலங்களவைக்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெற இருக்கிறது.

2. வேட்பாளர் அல்லது அவருடைய பெயரை முன்மொழிபவர்களில் ஒருவர், திரு. அ.மு.பி. ஜமாலுதீன், தேர்தல் நடத்தும் அதிகாரி மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் அல்லது திரு. க. பாலசுப்பிரமணியன், தேர்தல் நடத்தும் உதவி அதிகாரி மற்றும் சட்டமன்றப் பேரவைத் துணைச் செயலாளரிடம், சென்னை 600 009, சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 5.7.2011 முதல் 12.7.2011 முடிய எந்நாளிலும் (ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணிக்குள்ளாக வேட்பு மனுக்களை அளிக்கலாம்.

3. மேலே குறிப்பிடப்பெற்ற இடத்திலும், நேரத்திலும், வேட்பு மனு படிவங்கள் கிடைக்கும்.

4. வேட்பு மனுக்கள் சென்னை 600 009, சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் செயலாளர் அலுவலகத்தில் 13.07.2011–ஆம் நாளன்று காலை 11.00 மணியளவில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

5. வேட்பாளர் அல்லது அவரது பெயரை முன்மொழிபவர்களில் ஒருவர் அல்லது வேட்பாளரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அவரது தேர்தல் முகவர், 'வேட்பாளர் விலகல்' அறிவிப்பை மேலே பத்தி 2–இல் குறிப்பிட்டுள்ள அதிகாரிகள் எவரிடத்திலேனும் அவரது அலுவலகத்தில் 15.07.2011–ஆம் தேதியன்று மாலை 3.00 மணிக்குள் அளிக்கலாம்.

6. தேர்தலில் போட்டி இருப்பின், 22.07.2011 ஆம் நாளன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் வாக்குப் பதிவு நடைபெறும்.

இடம் : சென்னை 600 009
நாள் : 05.07.2011

(அ.மு.பி. ஜமாலுதீன்)
தேர்தல் நடத்தும் அதிகாரி
மற்றும் செயலாளர்
சட்டமன்றப் பேரவைச் செயலகம்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9